**சி.பி.எண்.1/2023** **06.02.2026**

**ம.த.சாட்சி 1 சித்ரா குறுக்கு விசாரணை**

நான் பணியில் சேர்ந்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. நான் மாதம் சம்பளம் பெற்றதற்கான ரசீதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் போனஸ், சம்பளம், சர்வீஸ் தொகை மற்றும் எதிர்மனுதாரர் அளித்த காசோலைக்கான தொகையை கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். ம.த.சா.ஆ.1-ல் காணப்படும் கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆகஸ்ட் மாதம் 2019-க்கான சம்பள ரசீது என்னுடையது தான் அது **எ.ம.த.சா.ஆ.1**. நிறுவனம் 30.09.2019 அன்று தொழிலில் நலிவு ஏற்பட்டதால் மூடப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய ராஜினாமா கடிதத்தில் எனக்கு சேர வேண்டிய இறுதி தொகையை கொடுக்கும்படி நான் நிர்வாகத்திடம் கேட்டு அதன் விவரத்தை அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.த.சா.ஆ1-ல் எனக்கு என்னென்ன தொகை சேர வேண்டும் என்று நிர்வாகம் கூறியதை நான் ஒப்புக்கொண்டு தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் என் மனுவில் கோரியிருக்கும் நீக்கப்பட்ட தொகை மற்றும் ஒரு மாத சம்பள அறிவிப்பு தொகையை பற்றி ம.த.சா.ஆ1-ல் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தொழிற்சாலை நலிவடைந்த காரணத்தினால் நானாக தான் ராஜினாமா செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விடுப்பு தொகையாக கம்பெனியிடம் இருந்து தொகை கோரி ஏற்கனவே கணக்கீட்டு மனு எண்.49/2021-ல் பரிகாரம் கோரியுள்ளேன் மறுபடியும் விடுப்பு தொகையை கோரி இந்த மனுவை 2வதாக தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நிறுவனம் மூடப்பட்ட பின்பு என்னுடைய வாழ்வாதாரத்திற்காக நான் வேறு ஒரு நிறுவனத்தில் பணி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிர்வாகம் என்னை பணிநீக்கம் செய்யவில்லை என்றும் கம்பெனி மூடப்பட்டதால் நானாகதான் ராஜினாமா அளித்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள தொகை அதிகப்படியானது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.02.06 16:42:33 +0530